**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 187** **நாள் : 20.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடங்களில் சூரிய ஒளி தகடுகள் மூலம் ரூ.22.42 கோடி மதிப்பீட்டில் 3.064 மெகாவாட் திறன் கொண்ட மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டப்பணிகளை விரைந்து முடித்திட ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு !**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மாநகர அலுவலக கட்டடங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட 662 கட்டடங்களில் சூரிய ஒளி (Solar) தகடுகள் மூலம் 3.064 மெகாவாட் திறன் கொண்ட மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டப்பணிகளை விரைந்து முடித்திட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மாநகராட்சி கட்டடங்களில் பொலிவுரு நகரத் திட்டத்தின் கீழ் (Smart City) ரூ.22.42 கோடி மதிப்பீட்டில் 662 கட்டடங்களில் 3.064 மெகாவாட் திறன் கொண்ட மின்சாரம் உற்பத்தி செய்ய ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன் முதற்கட்டமாக இராயபுரம் மண்டலம், வார்டு–53 படவட்டமன் கோயில் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் பொலிவுரு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.3.74 இலட்சம் மதிப்பீட்டில் 5 கிலோவாட் திறன் கொண்ட நாள் ஒன்றிற்கு 20 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும் சூரிய ஒளி தகடுகள் நிறுவப்பட்டு, நெட் மீட்டர் பொருத்தப்பட்டுள்ளது. இத்திட்டப்பணியை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.11.2018) நேரில் ஆய்வு செய்து, மீதமுள்ள கட்டடங்களிலும் சூரிய ஒளி தகடுகள் பொருத்தும் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, துணைஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையர்(வடக்கு) திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**